சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்)
நந்தனம், சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515590

**ஆணை நாள் 11.06.2026**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு).,**
**மாநில தகவல் ஆணையர்**

•••••

**வழக்கு எண். CP 866/E/2024, CP 1752/E/2024, SA 3089/E/2024, SA 6460/E/2024, SA 1374/E/2024, SA 1373/E/2024**

திரு.செ.பாக்யராஜ் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
நிர்வாக அலுவலர்,
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை -- பொது அதிகார அமைப்பு
359 அண்ணாசாலை, சென்னை - 600 006.

******

## ஆணை

இவ்வழக்குகளின் மீது இவ்வாணையத்தால் 11.03.2026 அன்று நேரடி விசாரணை மேற்கொள்ளப்பட்டு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது:-

a) மனுதாரர் வழக்கு எண்.CP 866/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு 10.01.2024 தேதியிட்டும், வழக்கு எண். CP 1752/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு 21.03.2024 தேதியிட்டும், வழக்கு எண். SA 3089/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு, 10.01.2024 தேதியிட்டும், வழக்கு எண். SA 6460/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு 21.03.2024 தேதியிட்டும், வழக்கு எண்.SA 1374/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு 22.12.2023 தேதியிட்டும், வழக்கு எண்.SA 1373/E/2024-ல் கோரிய தகவல்களுக்கு 22.12.2023 தேதியிட்டும் பொதுத் தகவல் அலுவலரால் தகவல் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் பதிவு செய்திருந்தது.

b) இருப்பினும், மனுதாரர் தனது குடும்ப உறுப்பினர்கள் 7 நபர்களின் பிறப்பு / இறப்பு பதிவு குறித்து தெரியவே மேற்படி தகவல்களை கோரியதாக 11.03.2026 தேதியிட்ட விசாரணையின் போது எடுத்துரைத்துள்ளார்.

c) எனவே, பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணை கிடைக்கப்பெற்றவுடன், இவ்வழக்கு குறித்து மனுதாரர் 11.03.2026 தேதியிட்ட விசாரணையின் போது குறிப்பிட்டுள்ள அவரது குடும்ப உறுப்பினர்களான மனுதாரரின் பாட்டி, (1) திருமதி.கிருஷ்ணவேணி (இறப்பு சான்று), தாத்தா (2) திரு.ராமுபிள்ளை (பிறப்பு மற்றும் இறப்பு சான்று) அப்பா (3) திரு.செந்தாமரை (இறப்பு சான்று), (4) திரு.நாச்சிபிள்ளை (பிறப்பு சான்று), (5) திருமதி.மாணிக்கம்மாள் (இறப்பு சான்று),

(6) திரு நானமுத்து (பிறப்பு சான்று) (7) திரு.பாக்கியராஜ் (பிறப்பு சான்று) ஆகியோரின் பிறப்பு / இறப்பு சான்று குறித்த மனுதாரரின் எழுத்து மூலமான கடிதமும் மற்றும் அதற்கு தேவையான மனுதாரர் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களையும் கோர (பொதுத் தகவல் அலுவலரின் கடிதத்தின் வாயிலாக) பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

d) அதன்படி, மனுதாரர் தனது கோரிக்கை குறித்த எழுத்து மூலமான கடிதத்தினை (உரிய ஆவணங்களுடன்) பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பும் பட்சத்தில், மேற்கண்ட நபர்களின் பிறப்பு / இறப்பு சான்று குறித்து, சட்ட விதிகளுக்கு உட்பட்டு, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதுகுறித்த விபரங்களை, ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் மனுதாரருக்கு வழங்கி, மனுதாரர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்ததற்கான ஒப்புகை அட்டையின் நகல் அல்லது அஞ்சல் துறையின் இணையதள அறிக்கையின் நகல் (Online Tracking Consignment) மற்றும் வழங்கப்பட்ட தகவல் குறித்த அறிக்கையின் நகலினை **இவ்வாணையத்தில் 27.04.2026 அன்று நேரில் சமர்ப்பிக்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.**

2. அதன்படி, பொது;j தகவல் அலுவலர் திருமதி.எ.ஜெயந்தி, நிர்வாக அலுவலர் அவர்கள் சார்பு திரு.பரணிக்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, சென்னை அவர்கள் இவ்வாணையத்தில் 22.05.2026-ல் நேரில் ஆஜராகில், 20.05.2026 தேதியிட்ட பொதுத் தகவல் அலுவலரின் அறிக்கையினை சமர்ப்பித்தார்.

3. இதற்கிடையில், மேற்படி வழக்குகள் குறித்து, மனுதாரர் இவ்வாணையத்திற்கு அனுப்பியுள்ள அவரது 11.03.2026, 25.03.2026 ஆகிய தேதியிட்ட கடிதங்களில், நடவடிக்கை மேற்கொள்ளவும், இழப்பீடு பெற்றுத் தரவும் ஆணையத்தைக் கோரியுள்ளார்.

4. **மனுதாரரின் கடிதம் மற்றும் பொதுத் தகவல் அலுவரின் அறிக்கையினை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு கீழ்கண்டவாறு <u>உத்தரவிடப்படுகிறது</u>**:-

a) 11.03.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவின்படி, இவ்வழக்குகள் குறித்து 11.03.2026 தேதியிட்ட நேரடி விசாரணையின்போது, மனுதாரரால் எடுத்துரைக்கப்பட்ட மனுதாரரின் குடும்பத்தார்களின் பிறப்பு / இறப்பு பதிவு சான்றிதழ்களை பெறுவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளும் மற்றும் அதன் தொடர்பாக அரசு ஆணைகள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை இணைத்து பொதுத் தகவல் அலுவலரின் கடித ந.க.எண்.19.19/மாசுபுமை.1/இரு.1/2026, நாள் 12.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி கடிதத்தினை மனுதாரர் சார்பு S.விஜயா என்பவர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகலினை பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தில் சமர்ப்பித்துள்ளார்.

b) மேலும், மேற்படி கடிதத்திற்கு மனுதாரரிடமிருந்து எழுத்துப்பூர்வமாக எந்தவொரு பதிலும் பெறப்படவில்லை என பொதுத் தகவல் அலுவலர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

c) <u>**இவ்வழக்குகளில் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு, பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல் குறித்து இவ்வணையத்தின் 11.03.2026 தேதியிட்ட உத்தரவில் ஏற்கனவே ஆணையத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது**</u>.

d) இருப்பினும், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த ஒரே பொருள் தொடர்பான பல்வேறு தகவல் பெறும் உரிமைச் சட்ட மனுக்கள் என்பது, மனுதாரரின் குடுப்பத்தார்களின் பிறப்பு / இறப்பு சான்று தொடர்பாக கோரப்பட்ட தகவல் என்று மனுதாரர் 11.03.2026 தேதியிட்ட நேரடி விசாரணையின் போது இவ்வாணையத்தில் குறிப்பிட்டிருந்ததால், மனுதாரரின் குடும்ப உறுப்பினர்களின் பிறப்பு / இறப்பு குறித்து பொதுத் தகவல் அலுவலர் மனுதாரிடம் எழுத்து மூலமான கடிதம் மற்றும் ஆவணங்கள் கோரவும், அதன்படி மனுதாரரும் உரிய ஆவணங்களுடன் கூடிய எழுத்து மூலமான கடிதத்தினை பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பவும், பொதுத் தகவல் அலுவலர் மற்றும் மனுதாரருக்கு இவ்வாணையத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

e) அதன்படி, **பொதுத் தகவல் அலுவலரால் 12.03.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு கடிதம் அனுப்பட்டுள்ளது**.

f) ஆனால், **மனுதாரர் பொதுத் தகவல் அலுவலருக்கு எவ்வித கடிதமும் அனுப்பப்படவில்லை என்பது இன்றைய ஆவண பரிசீலனையில் தெரியவருகிறது**.

g) எனவே, 11.03.2026 தேதியிட்ட இவ்வாணையத்தின் உத்தரவில் குறிப்பிட்டுள்ளவாறு, மனுதாரரிடமிருந்து, மனுதாரரின் குடும்பத்தார்களின் பிறப்பு / இறப்பு குறித்து உரிய ஆவணங்களுடம் கடிதம் பெறப்படும் பட்சத்தில், சட்டத்திற்குட்பட்டு நடவடிக்கை மேற்கொள்ள பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிட்டு, **இவ்வழக்கானது மேல்நடவடிக்கை ஏதுமின்றி முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது**.

**ஓம்/-(பி.தாமரைக் கண்ணன்)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். CP 866/E/2024, CP 1752/E/2024, SA 3089/E/2024, SA 6460/E/2024, SA 1374/E/2024, SA 1373/E/2024**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/ நிர்வாக அலுவலர் (ஆசுநி),
பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை
359 அண்ணாசாலை
சென்னை - 600 006.

**மேல்முறையீட்டாளர்**

திரு.பாக்கியராஜ் செ
1/369, மாரியம்மன் கோயில் தெரு,
கரடிசித்தூர் அஞ்சல்,
சின்னசேலம் தாலுக்கா,
கள்ளக்குறிச்சி மாவட்டம் -606 207.

Copy to: File MP/PA,